வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 24.1.2026 நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, நாட்டு மக்களிடையே நாளை குடியரசு தின உரை நிகழ்த்த உள்ளார்.

நாடு முழுவதும் 45 இடங்களில் நடைபெற்ற ரோஜ்கர் மேளாவில் 61 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்ற மாணவர் வலிமை மிகவும் அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

தேசிய வாக்காளர் தினம் நாளை கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, புதுச்சேரியில் பாதயாத்திரை மற்றும் சைக்கிள் பேரணி நடைபெற உள்ளது.

திரவுபதி முர்மு (9)

நாட்டின் 77 ஆவது குடியரசு தினம் நாளை மறுநாள் கொண்டாடப்படுவதை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு நாட்டு மக்களிடையே நாளை உரையாற்றுகிறார். இந்த உரை நாளை மாலை 7 மணிக்கு ஆகாஷ்வாணியின் அனைத்து தேசிய அலைவரிசைகளிலும் ஒலிபரப்ப ப்படும். மேலும், தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும், முதலில் ஹிந்தி மொழியிலும், அதனை தொடர்ந்து ஆங்கிலத்திலும் ஒளி பரப்பப்படும். பின்னர், தூர்தர்ஷனின் பிராந்திய அலைவரிசைகளில் அந்தந்த மொழிகளில் ஒளி பரப்ப படும். ஆகாஷ்வாணியில் பிராந்தி மொழி வடிவங்கள் இரவு 9.30 மணிக்கு ஒலிபரப்பாகும்.

ரோஜ்கர் மே□ா 1 (9)

இன்று நாடு முழுவதும் 45 இடங்களில் நடைபெற்ற ரோஜ்கர் மேளா எனும், வேலை வாய்ப்பு முகாம்களில் உள்துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், உயர் கல்வி, நிதி உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்களில் புதிதாக பணியமர்த்தப்பட்ட, 61 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன. பல்வேறு மாநிலங்களில் நடைபெற்ற இந்நிகழ்வுகளில் மத்திய அமைச்சர்கள்

பங்கேற்று, பணியாணைகளை வழங்கினர். இன்று புதுடெல்லியில் இருந்து காணொளி காட்சி மூலம் நடைபெற்ற 18 ஆவது தேசிய வேலை வாய்ப்பு முகாமில் பிரதமர் திரு நரேந்திரமோடி உரைநிகழ்த்தினார். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு……

(வாய்ஸ)

ரோஜ்கர் மே□ா 2 (17)

(வாய்ஸ்)

இன்று புதுடெல்லியில் நடைபெற்ற ரோஜ்கர் முகாமை தொடக்கி வைத்து பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, இளைஞர்களின் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை உருவாக்குவதில் மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக கூறினார். கடந்த 10 ஆண்டுகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை இரட்டிப்பாக்கிய உலகின் ஒரே பொருளாதாரம் நம்முடையதுதான் என்று திரு மோடி பெருமிதம் தெரிவித்தார். நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் இந்தியாவில் எஃப்.டி.ஐ மூலம் முதலீடு செய்வதாகவும், இத்தகைய முதலீடுகள் 2014 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்ததை காட்டிலும், 2.5 சதவிகிதத்திற்கும் மேல் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இத்தகைய முதலீடுகள் மூலம் இளைஞர்களுக்கு எண்ணற்ற வேலை வாய்ப்புகள் உருவாகி வருவதாகவும்

பிரதமர் கூறினார். இந்த வேலை வாய்ப்பு முகாம் ஒரு நிறுவனமாக மாறியுள்ளது என்றும், இதுவரை லட்சக்கணக்கான இளைஞர்கள் பல்வேறு அரசுத் துறைகளில் இருந்து பணி நியமன கடிதங்களை பெற்றுள்ளனர் என்றும் பிரதமர் தெரிவித்தார். இன்று விநியோகிக்கப்பட்ட பணி நியமன கடிதங்கள் தேசத்தை கட்டி எழுப்புவதற்கான ஓர் அழைப்பு என்று கூறிய அவர், இது ஒரு வளர்ந்த இந்தியாவை நோக்கி இளைஞர்களை வழி

ரோஜ்கர் மே□ா 3 (16)

நடத்துவதற்கான ஒரு சங்கல்ப பத்திரம் என்றும் தெரிவித்தார். இந்திய அரசியல் அமைப்பு சட்டம் ஜனகனமன-வை தேசிய கீதமானவும், வந்தே மாதரம் பாடலை தேசிய பாடலாகவும் அங்கீகரித்த நாளும் ஜனவரி 24 ஆம் தேதி என இந்நாளின் முக்கியத்துவத்தை பற்றியும் பிரதமர் குறிப்பிட்டார்.

இம்முகாமில், பணியாளர்- பொதுமக்கள் குறைகள் மற்றும் ஓய்வூதியத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் பங்கேற்று உரையாற்றுகையில், அதிக எண்ணிக்கையிலான பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அரசின் பல்வேறு விதிகள் காரணமாக பாதுகாப்பு படைகளில் பெண்களை நியமிப்பது சாத்தியமானது என்று கூறினார். மேலும், எல்லைப் பாதுகாப்பு படையிலும் பெண்கள் துருப்புகளாக நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார். சென்னையை

அடுத்த ஆவடியில் நடைபெற்ற வேலை வாய்ப்பு முகாமில், மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர், இளைஞர்கள் புத்தொழில் நிறுவனங்களை தொடங்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதில், மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக தெரிவித்தார்.

விஸ்வகர்மா (12)

பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின் கீழ், பிரதமர் விஸ்வகர்மா ஹாட்-2026 கண்காட்சி புதுடெல்லியில் நடைபெறுகிறது. நாட்டின் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்தும் 117 க்கும் மேற்பட்ட கைவினை கலைஞர்கள் இக்கண்காட்சியில் தங்களது படைப்புகளை காட்சிக்கும் விற்பனைக்கும் வைத்துள்ளனர். இக்கண்காட்சி கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல், பாரம்பரிய திறன்களை பாதுகாத்தல், மற்றும், சிறு-குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் சூழல் அமைப்பை வலுப்படுத்துதல் உள்ளிட்டவற்றில் அரசின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 31 ஆம் தேதி வரை நடைபெறும் இக்கண்காட்சியினை காலை 10.30 மணிமுதல், இரவு 10 மணி வரை பொதுமக்கள் பார்வையிடலாம்.

*ராஜ்நாத் சிங்* (13)

என்சிசி என்பது அணிவகுப்புகள், பயிற்சிகள், அல்லது முகாம்கள் மட்டுமல்ல என்றும், ஒழுக்கம், தேச பக்தி ஆகியவற்றை வளர்க்கும் ஒரு தளம் என்றும் மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறினார். புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின முகாமில், தேசிய மாணவர் படை வீரர்கள் இடையே உரையாற்றிய அவர், தேசிய மாணவர் படை என்பது சுய முன்னேற்றத்திற்கும், இளைஞர்கள் இடையே உள்ள கவனக்குறைவை நிவர்த்தி செய்யும் ஒரு தளமாகவும் அமைகிறது என்றும் குறிப்பிட்டார். 2047 ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ச்சி அடைந்த நாடாக மாற்றுவதற்கு மாணவர்கள் வலிமை மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று கூறிய திரு ராஜ்நாத் சிங், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, பாகிஸ்தானில் தங்கியிருந்த பயங்கரவாதிகளை நம் வீரர்கள், மிகுந்த பொறுமையுடனும், வலிமையான முறையிலும் அழித்தனர் என்றும் கூறினார்.

*தேசிய பெண் குழந்தைகள் தினம்* 1 (13)

தேசிய பெண் குழந்தைகள் தினம் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நாளில் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், ராணி வேலு நாச்சியார், ராணி லட்சுமி பாய் உள்ளிட்டோர் பெண்குழந்தைகளுக்கு உந்து சக்தியாக திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார். நாட்டின் வளர்ச்சியில் பெண்கள் முக்கிய பங்கு வகிப்பதாகவும், மகளிர் தலைமையிலான மேம்பாட்டிற்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும், அவர் தமது வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 24ஆம் தேதி கொண்டாடப்படும் இந்த நாள் பாலின பாகுபாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சம வாய்ப்புகளை ஊக்குவிக்கவும், பெண்கள் அதிகாரம் பெற்ற குடிமக்களாக செழிக்க கூடிய ஒரு சூழலை வளர்க்கவும் ஒரு தளமாக அமைகிறது. இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு.......

(வாய்ஸ்)

*தேசிய பெண் குழந்தைகள் தினம் 2 (12)*

(வாய்ஸ்)

<u>பிரதமர் திரு நரேந்திர மோடியால் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் தேதி தொடங்கப்பட்ட பேட்டி பச்சாவோ-பேட்டி படாவோ</u>

திட்டத்தின் ஆண்டு விழா, சமீபத்தில் நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. இந்த முக்கிய முன் முயற்சியானது பெண் சிசு கொலை, குழந்தை திருமணம், மற்றும் பாலின பாகுபாடு போன்ற முக்கியமான பிரச்சனைகளை கையாள்வதையும், அதே நேரத்தில் பெண்களின் கல்வி, சுகாதாரம், மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது. கடந்த 2008 ஆம் ஆண்டு, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் முதன் முதலாக இந்தியாவில் தேசிய பெண் குழந்தைகள் தினம் உருவாக்கப்பட்டது என்பதும், பெண் குழந்தைகள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளை கையாளுவதை நோக்கமாக கொண்டு இந்த நாள், ஆண்டு தோறும் கொண்டாடப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

தேசிய வாக்கா□ர் தினம் (8)

தேசிய வாக்காளர் தினம் நாளை கடைபிடிக்கப்படுவதை ஒட்டி, புதுச்சேரியில் பாதயாத்திரை மற்றும் சைக்கிள் பேரணி நடைபெற உள்ளதாக மை பாரத் புதுச்சேரி மாநில ஒருங்கிணைப்பாளர் திருமதி காயத்ரி தெரிவித்துள்ளார். மை பாரத் மத்திய அரசு மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகம் சார்பில் தேசிய

வாக்களார் தின பாத யாத்திரை மற்றும் சைக்கிள் பேரணி, மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு ஜவகர் தலைமையில், நாளை காலை கம்பன் கலையரங்கில் தொடங்க உள்ளதாக அவர் கூறினார். இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,...........

(வாய்ஸ் காயத்ரி)

*அஸ்வினி வைஷ்ணவ்* (8)

செமி கண்டக்டர் துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாக மத்திய மின்னனு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். அரசு முறை பயணமாக நெதர்லாந்து சென்றுள்ள அவர், அந்நாட்டில் செயல்படும் செமி கண்டக்டர் உற்பத்தி பிரிவை பார்வையிட்டு, அதிகாரிகயுடன் கலந்துரையாடினார். செமி கண்டக்டர் துறையின் முன்னணி நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

*கிரிராஜ் சிங்* (8)

நாட்டின் ஜவுளித் துறை கடந்த 10 ஆண்டுகளில் அதிக வேலை வாய்ப்புடன் குறிப்பிடத் தக்க வளர்ச்சியை எட்டி உள்ளதாக மத்திய

ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற 74 ஆவது இந்திய சர்வதேச ஜவுளி கண்காட்சியில் உரையாற்றிய அவர், 2025 ஆம் ஆண்டில் உள்நாட்டு சந்தை 13 லட்சம் கோடி ரூபாயாக வளர்ச்சி அடைந்துள்ளதாக குறிப்பிட்டார். ஜவுளித் துறையில் உள்ள பல்வேறு இடர்பாடுகளை களைய மத்திய அரசு பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

*வானிலை* (7)

தென்மேற்கு வங்க கடல் பகுதியில் நிலவும் வலி மண்டல சுழற்சி காரணமாக செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வட தமிழக கடலோர பகுதிகளில் இன்று சூறாவளி காற்று மணிக்கு 40 முதல் 60 கிலோ மீட்டர் வேகம் வரை வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*கிரிக்கெட்* (3)

வதோதராவில் இன்றிரவு 7.30 மணிக்கு தொடங்க உள்ள மகளிர் ப்ரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி, டெல்லி கேப்பிடல்ஸ் அணியை எதிர் கொள்கிறது.

-----------------------